கான்பெரா தமிழ்ச் சங்கம்
CANBERRA TAMIL ASSOCIATION
“தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்”

# சங்கச் சங்கதிகள்



பதிப்பு 6 – தை 2023

w: canberratamilassociation.org.au e: cta1983@hotmail.com.au

## தலைமைக் குறிப்பு

வணக்கம்

கான்பெரா தமிழ்ச் சங்க அங்கத்தவர்களுக்கும் நலன் விரும்பிகளுக்கும், ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் வாழ்த்துகள்!

பிறந்திருக்கும் புத்தாண்டு, எல்லோருக்கும், எல்லாவகையிலும் ஆரோக்கியமானதாக அமைய இறையருள் வேண்டிக்கொண்டு....

மலர்ந்திருக்கும் இவ்வருடம் கான்பெரா தமிழ்ச் சங்கத்தின் மாணிக்க வருடம் என்பதை உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் நிருவாகக்குழு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறது!

நான்கு தசாப்தங்கள் என்ற மாணிக்க மைல்கல் கான்பெரா தமிழ்ச் சமூகத்தின் பெருமைமிகு சாதனை, பாரம்பரியத்தின் பிரதிநிதித்துவம், பண்பாட்டின் பரிமளிப்பு, பல்லினக் கலாச்சாரத்துக்கான பங்களிப்பு, தமிழ் மொழித் தொன்மைச் செல்வத்தின் தாற்பரியம் இன்னும் எத்தனையோ சொல்லி இறுமாப்புக் கொள்ளலாம்!

கான்பெரா தமிழ்ச் சங்கத்துக்குக் கரு தந்து பிரசவித்து, வழிகாட்டி வளர்த்தெடுத்து, சோர்ந்தபோது சோம்பல் நீக்கி, கரம்பிடித்து உரம் கொடுத்த முப்பத்து மும்மூன்று வருடத்து மூத்த தலைவர்களுக்கும் முதற்கண் இந்த நாற்பதாவது நிருவாகக்குழுவின், சிரம் தாழ்ந்த, கரம் குவிந்த வணக்கமும், வாழ்த்துகளும்!

ஏர் பிடித்து நீர் பாய்ச்சி விதை விதைத்துக் களை நீக்கி விரும்பி நீங்கள் வளர்த்த சங்கம் விருட்சமாக நிற்கிறது!

வரலாறாய் வளர்ந்து இங்கு, வலுவாய் நிற்கும் சங்கத்துக்கு, வாழ்த்து சொல்லும் நேரமிது.
நான்கு தசாப்தங்கள் நடந்து வந்தபாதை தன்னைத் திரும்பிப் பார்க்கும் நேரமிது.
வரலாற்றில் பங்குபற்றி வரலாறாய் மாற நாங்கள் கரம் கோர்க்கும் காலமிது!


கொண்டாட வேண்டாமோ?
ஒற்றுமையாய் ஒன்றாகிக் கூடிக் குதூகலித்துக் கொண்டாட வேண்டாமோ?
வேற்றுமைகள்தமை மறந்து நற்றமிழ்ச் சங்கத்தின் நல்ல இந்தச் சாதனையைப் போற்றிப் புகழ்ந்து நாங்கள் கொண்டாட வேண்டாமோ?

வாருங்கள் கொண்டாட...வைகாசித்திங்கள் இருபதாம் நாள்..!
மாணிக்க விழாக் காணும் மாத்தமிழ்ச் சங்கத்துக்கு விழாவெடுப்போம் வாருங்கள்!

மீதி விபரங்கள் விரைவில்!!!

We wish our members and well-wishers Happy New Year and Happy Thai Pongal.
Praying for a healthy new year for everyone...the Executive Committee is delighted to share with you that this blossoming year is a golden year for the Canberra Tamil Association – celebrating its 40th year since its inception in 1983!
To mark the significance of this great milestone and pay tribute to all those who have contributed to this achievement, we invite you all to join for a celebration on 20 May 2023.

Watch this space for further information in the very near future.
வாழ்க தமிழ்!



## இனிவரும் எங்கள் நிகழ்வுகள்

**Saturday, 18 Feb 2023.**

25th National Multicultural Festival. CTA will hold a food stall on Saturday, Feb 18th. Your help with running the stall is very much appreciated.

**Saturday, 11 Mar 2023**

Collection of clothes for disad-vantaged.

CTA appreciates your help with various tasks involved in this charity work.

More info to come shortly.

**Saturday, 22 April 2023**

Sithirai Santhippu - the outdoor celebration, marking Thamizh New Year 2023!

As it was in 2022, Tons of fun.

Watch this space for further info.

**Saturday, 5 May 2023**

குத்து with கொத்து 2023

(to be confirmed)

**Saturday, 20 May 2023**

40th year Anniversary celebra-tions!

Watch this space for further info.

# நிகழ்வின் நிழல்கள்!

## தைப்பொங்கல் 2023



# பாக்குவெட்டி பறக்குமா

திருமதி. யோகேஸ்வரி கணேசலிங்கம்

விறகு தறிக்க கறி நறுக்க
வெண்சோற்றுப்புக் கடகு வைக்க
பிறகு பிளவு கிடைத்த தென்றால்
நாலாறாகப் பிளந்து கொள்ளப்
பறகு பறகு என்றே சொறியப்
பதமாயிருந்த பாக்கு வெட்டி
இறகு முளைத்து போவதுண்டோ ?
எடுத்தீராயிற் கொடுப்பீரே



கிட்ட தட்ட 40, 50 ஆண்டுகளுக்கு முன் எங்கள் தாய் நாட்டில் பாக்கு வெட்டி இல்லாத வீடுகளே இல்லை. வீடுகளுக்கு விருந்தினர் வந்தால் முதலில் வெற்றிலை பாக்கு உபசரிப்பது வழக்கில் இருந்தது. பித்தளை தட்டத்தில் வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு வைத்திருப்பார்கள். பாக்கு சீவலாக இருக்காது, பாக்கை வெற்றிலை போடும்போது சீவி எடுப்பார்கள். வீட்டுக்காரர் சீவியும் கொடுப்பார். இதனால் பாக்கு வெட்டியும் வெற்றிலை தட்டத்தோடு சேர்ந்து இருக்கும்.

இராமச்சந்திர கவிராயர் என்ற புலவர் ஒரு பாக்கு வெட்டியை வைத்திருந்தார். அது அவருக்கு பல உதவிகளை செய்தது. இன்று வீடுகளில் பொருட்கள் தேவைக்கு அதிகமாக வைத்திருக்கிறோம். ஆனால் தேவைக்கு வேண்டிய பொருட்களை வைத்திருந்த காலம் அது. ஒரு நாள் புலவருடைய பாக்கு வெட்டி காணாமற் போய்விட்டது.

புலவர் துடிதுடித்து போனார். எங்கும் தேடிப்பார்த்தார். பாக்கு வெட்டி கிடைக்கவில்லை. யாரோ அதனை திருடி விட்டார்கள் என்ற பயம் அவரைக் கௌவிக் கொண்டது. எல்லோரையும் கூப்பிட்டார். தான் என்னென்ன செயல்களுக்கு பாக்குவெட்டியை பயன்படுத்துவேன் என்று கூறத்தொடங்கினர். அதைக் கேட்டாவது எடுத்தவர்கள் இரக்கங்கொண்டு திருப்பி கொடுத்துவிடக்கூடும் என்ற நம்பிக்கை இருந்தது.

நான் சமையலுக்கு வேண்டிய விறகுகளை வெட்டுவேன். வேண்டும்போது காய், கறிகளை நறுக்குவேன், சோற்றுக்கு அரிசி அல்லது உப்பு இல்லாத போது இதனை அடகு வைத்து அவற்றைப் பெற்றுக் கொள்ளுவேன்.

பாக்கு பிளந்து கிடந்தால், அதனை நாலாகவோ, ஆறாகவோ துண்டுகளாகப் பிளப்பேன். உடம்பில் அரிப்பு (கடி) ஏற்பட்டால் பற, பற என்ற சத்தம் வருமளவுக்குச் சொறிவேன்.

இத்தனை வழிகளில் எனக்கு பயன்பட்ட பாக்குவெட்டி சிறகு முளைத்து பறந்து சென்றிருக்காது. யாராவது எடுத்திருந்தால் தயவுசெய்து கொடுங்கள் என்று கெஞ்சி கேட்கிறார்.

புலவருடைய கெஞ்சுதலே மேற்கூறிய பாடல். பாடலை மீண்டும் படித்தீர்களானால் பொருளை விளங்கி கொள்ளுவீர்கள்.

# Volunteering opportunities

**Multiple fundraiser events**

We are always looking forward to help from the community for our various charity activities. There are numerous events which require support from our community to give back to charities, both locally and abroad. If you are interested in helping at our next event, please get in contact with a CTA executive committee member , or send us an email!

**Your feedback is important to us!**

Please let us know your thoughts on this newsletter through either letting a contributor know or by emailing us at cta1983@hotmail.com.au

**ThendralFM Radio (91.1FM)**

ThendralFM continues to actively recruit radio hosts for our adult and youth programs.

Please get in contact with Raagavan Sivapalan on 0424 434 474 if you are interested in participating or would like further information.

# கவிதைப் பெட்டகத்தில் இருந்து... - *ஆழியாள்*

நீலாவணனின் புகழ்பூத்த இந்தக் கவிதை 1965இல் ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்தது.

## ஓ ...என் வண்டிக்காரா!

**ஓ என் அருமை வண்டிக்காரா,**
**ஓட்டு வண்டியை ஓட்டு!**
**போவோம் புதிய நகரம் நோக்கிப்**
**பொழுது போமுன் ஓட்டு!**

**காவில், பூவில், கழனிகளெங்கும்**
**காதல் தோயும் பாட்டு!**
**நாமும் நமது பயணந் தொலையக்**
**கலந்து கொள்வோம் கூட்டு! – ஓட்டு**

**ஓ....! என் அருமை வண்டிக்காரா....**

**பனியின் விழிநீர் துயரத் திரையில்**
**பாதை மறையும் முன்னே**
**பிணியில் தேயும் பிறையின் நிழல் நம்**
**பின்னால் தொடரும் முன்னே.... ஓட்டு**

**ஓ....! என் அருமை வண்டிக்காரா....**
**ஓட்டு வண்டியை ஓட்டு!**
**போவோம் புதிய நகரம் நோக்கிப்**
**பொழுது போமுன் ஓட்டு!**

**-நீலாவணன்-**

இங்கே *ஓ...என் வண்டிக்காரா!* என்று நீலாவணன் ஆதூரமாக விளிப்பது மாட்டு வண்டிக்காரரையோ, குதிரை வண்டிக்காரரையோ அல்லது மோட்டார் வண்டிக்காரரையோ மட்டுமல்ல – அவரது '*என் வண்டிக்காரா!*' என்ற விளிப்பினூடாக வாழ்வெனும் வண்டிப் பயணத்தை முன்னகர்த்திச் செல்லப் பிரயத்தனப்படும் ஒவ்வொரு மனிதனையும் உள்ளடக்குகிறார்.

உழைக்கும் மனிதரின் மீதான கவிஞரின் வாஞ்சையை '*என்*' '*அருமை*' ஆகிய சொற்களினூடாக வெளிப்படுத்தி, அவற்றை மீண்டும் மீண்டும் சரியான இடம், பொருள் ஏவலோடு பாவனைக்குட்படுத்துவதால், கவிதை வாசகரின் மனதைப் பற்றிவிடுகிறது.

துயரங்கள் வழிப்பாதையை மறைக்க முன், '*பிணியில் தேயும்*' தேய்பிறையின் நிழல்தன்னும் அண்ட முன், இந்த வாழ்வெனும் வண்டிப்பயணத்தை சுபீட்சத்தை எதிர்நோக்கிச் செலுத்துவாயாக.

'*என் அருமை*' மனிதா, காலம் தாழ்த்தாதே என்கிறார் நீலாவணன்.

வாய்விட்டு வாசித்துச் சுவைக்கவும், பாடலாகப் பாடுவதற்கும் ஏற்ற வரிகளையும், ஓசை நயத்தையும் கொண்டிருக்கும் அதே நேரத்தில் நேர்மறை உணர்வை எழுப்பி, உத்வேகத்தை அள்ளித் தருகின்ற ஒரு கவிதை இதுவாகும்.





## கண்டு பிடியுங்கள் கண்டு பிடியுங்கள்!

பன்னிரண்டு தீக்குச்சிகளைக்கொண்டு, அருகே காட்டப்பட்டிருப்பதைப்போல் ஒரு சிலுவையை அமைக்கவும். ஒரு தீக்குச்சியின் நீளம் x என வைத்துக்கொண்டால், இதன் உள் பரப்பளவு $5x^2$ ஆகும்.

பன்னிரண்டு தீக்குச்சிகளையும் மாற்றி வைத்து, ஒரு மூடப்பட்ட அமைப்பை. அதன் உள் பரப்பளவு $4x^2$ ஆக இருக்கும்படி உருவாக்க வேண்டும். முயன்று பாருங்கள்.

உங்கள் பதில்களை cta1983@hotmail.com.au மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள். சரியான பதில்களை அனுப்பும் முதல் மூன்று நபர்களின் பெயர்கள் அடுத்த இதழில் வெளிவரும்.



# மடத்தடி நினைவுகள்

**யோகன்**



கோடை காலங்களில் கால் நடையாக நெடுந்தூரம் செல்லும் வழிப்போக்கர்களுக்காக தண்ணீர்த் தொட்டிகள் வைக்கப்பட்டிருந்ததை கண்டு வந்திருக்கிறோம். தண்ணீர்த் தொட்டிகள் மட்டுமல்ல, நடைப் பயணிகள் இளைப்பாறுவதற்காக, தங்கு மடங்களும், சத்திரங்களும் இருந்தன. கால ஓட்டத்தில் வாகனப் போக்குவரத்தில் ஏற்பட்ட வளர்ச்சியினால் நடைப் பயணங்கள் அருகிப் போக இந்த மடங்களும், சத்திரங்களும் பாவனைக்கு உதவாமற் போய் விட்டன. இப்போது உடற்பயிற்சிக்காக மட்டுமே நடப்பது என்ற நிலை தோன்றியுள்ளது வேடிக்கைதான்.

அன்ன சத்திரங்களை விட ஆடு மாடுகள் தாக சாந்தி செய்வதற்காக கட்டப்பட்ட தண்ணீர்த் தொட்டிகளும் இருந்தன. தொட்டியடி, தண்ணீர்த் தொட்டிலடி என்ற பெயர்களெல்லாம் இந்த கால்நடைகளுக்கான தாக சாந்தி மையங்களை குறிக்கும் வண்ணம் இடப்பட்ட பெயர்கள்தான். அன்ன சத்திர ஒழுங்கை என்றெல்லாம் பாதைகளுக்குப் பெயர் இருக்கிறது. ஆறு கால் மடத்தடி என்றும் இடப் பெயர் வந்தது. மடத்தடி என்ற பெயரிலேயே பல இடங்களை குறிப்பிட்டுச் சொல்கிறோம்.

இன்னொரு நினைவு கோயில்களில் தேர்த் திருவிழா நடை பெறும்போது பக்கதர்களுக்கு தாக சாந்தி செய்யும் வண்ணம் தற்காலிகமாக அமைக்கப்படும் தண்ணீர்ப் பந்தல்கள். தேர்த் திருவிழாவன்று தண்ணீர்ப் பந்தலில் மோர்த் தண்ணீர், ஊறுகாய்த் தண்ணீர், சக்கரைத் தண்ணீர் என்று வெயிலில் கால் நடையாக நடந்து களைத்து வரும் பக்தர்களுக்கு பரிமாறப்படும் இம்மூன்றில் ஊறுகாய்த் தண்ணீரின் சுவையே எனக்குப் பிடித்தது.

இப்போது கொரோனா வைரசு பாதுகாப்புக்காக அவ்வப்போது சுடு தண்ணீரில் எலுமிச்சை பழத்தை வெட்டிப் போட்டுக் குடிக்கும்போது ஊறுகாய்த் தண்ணீரை அது நினைவூட்டத் தவறுவதில்லை.

அன்ன சத்திரங்களில் புலவர்களும் தங்கி உணவுண்டு ஆறிச் செல்லும் வழக்கம் தமிழ் இலக்கியங்களிலும் வந்திருக்கிறது. விகடமாகக் கவி புனைந்த காளமேகப் புலவர் ஓர் இரவு உணவுக்காக சத்திரத்தில் நீண்ட நேரம் காத்திருந்ததை இப்படி நையாண்டியாகப் பாடினார்.

“கத்துகடல் சூழ்நாகைக் காத்தான் தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசி வரும்- குத்தி உலையிலிட ஊரடங்கும்
ஓரகப்பை அன்னம் இலையிலிட வெள்ளி எழும்.”

(காளமேகப் புலவர்)

கடலின் இரைச்சல் சூழ்ந்த நாகப்பட்டினத்தில் இருக்கும் காத்தான் சத்திரத்தில் அஸ்தமிக்கும் வேளையில்தான் அரிசியே வந்து சேரும். அதை குத்தி உலையில் போடும் போது நள்ளிரவாகி விடும். பிறகு அதை வடித்து ஓர் அகப்பை சோற்றை இலையில் பரிமாறுவதற்குள் வெள்ளி முளைத்து பொழுது விடிந்து விடும்’ என்று சத்திரக்காரனை கேலி செய்து காளமேகப் புலவர் இந்தப் பாடலை பாடினாராம்.

இப்பாடலின் பொருளறிந்து சத்திரக்காரன் காளமேகத்திடம் வந்து ‘இப்படி வசை பாடி என் சத்திரத்தின் பெயருக்கு இழுக்கு உண்டாக்கி விட்டீரே’ என்று குறைபட்டானாம்.

இதனால் காளமேகம் மனம் நொந்து போய் ‘இல்லை இல்லை இதன் பொருள் இப்படியாகத்தான் எண்ணிப் பாடினேன்’ என்று பின்வருமாறு சொன்னாராம்.

‘உலகமெங்கும் பஞ்சம் வந்து அஸ்தமித்தாலும் நாகப்பட்டினத்தில் இருக்கும் காத்தான் சத்திரத்தில் அரிசி வரும். உலை ஏற்றிய உடனேயே ஊராரின் பசி அடங்கும். இலையில் பரிமாறிய அன்னத்தின் வெண்ணிறத்தைப் பார்க்கையில் வெள்ளி உதயமாவது போல் இருக்கும்’

சத்திரக்காரனிடம் தப்பித்து கொள்ள அவர் தமிழ் கை கொடுத்தது.

**DISCLAIMER:** *This newsletter is for informational purposes only. Content of the articles represent the views of the respective authors and the Canberra Tamil Association takes no responsibility for the accuracy of the information in the articles published in this newsletter.*


நத்தார் தின விழா, 2022
நிகழ்வின் நிழல்கள்!

## சிறந்த துணை நடிகர்/நடிகைக்கான விருது...

...இது கான்பெராவின் கருத்து!

**ராகவன் சிவபாலன்**

ஒரு படத்தைப் பார்க்கும் பொழுது பார்வையாளர்களாக நாங்கள் கதாநாயகன், கதாநாயகி, நகைச்சுவைக் கலைஞர்கள் மற்றும் வில்லனாக நடிப்பவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்போம்.
இவர்களை விட மேலும் பல முக்கியமான கதாபாத்திரங்கள் ஒரு படத்தில் நிறையவே இருக்கும். உதாரணமாக குடும்பத்தினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊர்ப் பெரியவர்கள் போன்றவர்கள். இப்பாத்திரங்களில் துணை நடிகர்களும், துணை நடிகைகளும் மிக அற்புதமாக நடித்து ஒரு படத்துக்கு மேலும் மெருகூட்டியிருப்பார்கள்.

இப்படியான கதாபாத்திரங்களுக்கு 2000 ஆண்டில் இருந்து மிகச்சிறந்த மற்றும் பிரபலமான கலைஞர்களான ரகுவரன், நாசர், பிரகாஷ் ராஜ், சத்யராஜ், MS பாஸ்கர், மணிவண்ணன்,சரண்யா பொன்வண்ணன், மற்றும் ராதிகா சரத்குமார் மேலும் மற்றும் பலர் நடித்திருக்கிறார்கள். இவர்களுக்கு எம்மை சிரிக்க, அழ மற்றும் சிந்திக்க வைக்கத் தெரியும். சமீப காலங்களில் முனீஸ்காந்த், 'ஆடுகளம்' நரேன், மற்றும் காளி வெங்கட் போன்றவர்களும் மிக நன்றாகவே நடிக்கின்றார்கள்.

2022ம் ஆண்டு இருநூறுக்கு மேற்பட்ட படங்கள் வெளியாகின. அவற்றில் இருந்து சிலர் சங்கச்சங்கதிகள் சார்பாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர்.
ஐஸ்வர்யா லட்சுமி (பொன்னியின் செல்வன்:1)
முனீஷ்காந்த் (சர்தார்)
பகத் பாஷில் (விக்ரம்)
பிரகாஷ் ராஜ் (திருச்சிற்றம்பலம்)
ராதிகா சரத்குமார் (பட்டத்து அரசன்)
சத்யராஜ் (லவ் டுடே)
இவர்களில் இருந்து உங்கள் கருத்தின்படி யார் 2022ன் சிறந்த துணை நடிகர்/நடிகை? **அதற்கான** காரணம் என்ன?

உங்கள் வாக்குகளை cta1983@hotmail.com.au மின்னஞ்சலுக்கு 12/02/23 முன்பு அனுப்புங்கள்.

ஒவ்வொரு குடும்பஉறுப்பினர்களும் ஒரு வாக்கு மட்டுமே அளிக்கலாம்! **முடிவுகள் அடுத்த சங்கச்சங்கதி மற்றும் தென்றல்FM வானொலி நிகழ்ச்சியில் (05/03/23) அறிவிக்கப்படும்.**

## கண்டு பிடியுங்கள் கண்டு பிடியுங்கள்! (பதிப்பு 5) புதிரின் விடை

ஆரம்ப நிலையை

| | 8L | 5L | 3L |
|---|---|---|---|
| Initial stage | 8 | 0 | 0 |

என குறிப்பதாக வைத்துக்கொள்வோம்.

8 லிட்டர் கொள்கலனிலிருந்து 3 லிட்டர் கொள்கலனுக்கு, அது முற்றாக நிரம்பும்வரை எண்ணெயை ஊற்றியபின் உள்ள நிலையை

| | 8L | 5L | 3L |
|---|---|---|---|
| Initial stage | 8 | 0 | 0 |
| Step 1 | 5 | 0 | 3 |

என குறிப்பிடுவோம்.

இந்த முறையை பின்பற்றி, விடை கீழே உள்ளது.

| | 8L | 5L | 3L |
|---|---|---|---|
| Initial stage | 8 | 0 | 0 |
| Step 1 | 5 | 0 | 3 |
| Step 2 | 5 | 3 | 0 |
| Step 3 | 2 | 3 | 3 |
| Step 4 | 2 | 5 | 1 |
| Step 5 | 7 | 0 | 1 |
| Step 6 | 7 | 1 | 0 |
| Step 7 | 4 | 1 | 3 |
| Step 8 | 4 | 4 | 0 |



ஒருவரும் சரியான பதில் அனுப்பவில்லை


கோலாகலத் தீபாவளி , 2022
கன்பரா தமிழ்ச் சங்கம்
CANBERRA TAMIL ASSOCIATION
நிகழ்வின் நிழல்கள்!

# கல்கியின் பொன்னியின் செல்வனும் மணிரத்னத்தின் PS1ம்

திருமதி அனிதா ஜெயசிங்கம்

...என் பார்வையில் (தொடர்ச்சி)



நான் சென்ற இதழில் மேலேயுள்ள தலைப்பில் எழுதி தொடர்ந்து எழுதுவதாக குறிப்பிட்டிருந்தேன். சின்னச் சின்ன விடயங்களில் கூட கவனம் எடுத்திருக்கிறார்கள். ஆதித்த கரிகாலன் தனது உறைவாளை வந்தியத்தேவனிடம் கொடுத்தனுப்பும் போது பார்த்திபேந்திர பல்லவன் அதை அசூசையுடன் பார்த்துக்கொண்டிருப்பது, அரசகுலத்தவர்கள் வரும் போது அந்தணர்கள் பூரணகும்பத்துடன் நின்று, மந்திரமோதி வரவேற்பது, அரண்மனையிலுள்ள சுரங்கப்பாதை இருக்கும் இடத்தைக் குறிக்க ஈட்டியுடன் இருக்கும் படம் என்பன சில உதாரணங்கள். அதேபோல, மந்தாகினி யானையுடன் வந்து பொன்னியின் செல்வன், வந்தியத் தேவன் மற்றும் ஆழ்வார்க்கடியானைக் காப்பாற்றிவிட்டுச் செல்லும் போது மூவரும் அவரைப் பார்த்தபடி நிற்பார்கள். ஒவ்வொருவரின் முகத்திலும் ஒவ்வொரு உணர்ச்சி தெரியும். வந்தியத்தேவனின் முகத்தில் குழப்பமும், ஆழ்வார்க்கடியானின் முகத்தில் ஒரு புன்சிரிப்பும். பொன்னியின் செல்வனின் முகத்தில் ஒரு பரிவும் பாசமும் தெரியும்.

என்றாலும் என்றாலும் எனக்குச் சில, சில சின்னக் குறைகளும் தெரிந்தன. கல்கியின் பொன்னியின் செல்வன் தொடரில் ஆளுமை செய்தவர்கள் 55 பாத்திரங்கள். அவற்றில் முக்கியமானவை 37. அவர்களில் ஒருவரான குடந்தை ஜோதிடர் படத்தில் வராதது எனக்கு சற்று ஏமாற்றமாக இருந்தது. ஏனெனில் அங்குதான் குந்தவையும் வந்தியத்தேவனும் முதன் முதலாகச் சந்திக்கிறார்கள். அதுவும் இளையபிராட்டிக்குரிய இராஜகுமாரர் இப்போ வருவார் என்று ஜோதிடர் சொல்லவும் தடல்புடலாக அங்கு வந்தியத்தேவன் நுழைவதும் என் மனக்கண்களில் இருந்த ஒரு காட்சி. வானதியின் வயிற்றில் பிறக்கப் போகும் மகனின் வீரபராக்கிரமங்களைப் பற்றியும் சொன்னார்.

குந்தவையும் வந்தியத்தேவனும் இரண்டாவதாகச் சந்திப்பதுவும் ஒரு அற்புதக்காட்சி. படகுத்துறையையும் குந்தவையையும் மிக அழகாகக் காட்டியிருந்தார்கள். ஆனால் கல்கி வர்ணித்த "ஓடையில் அலைகள் ஓய்ந்து அடங்கின, பட்சி ஜாலங்கள் பாடுவதை நிறுத்தின, அண்ட பகிரண்டங்கள் அசையாது நின்றன, பல யுகங்கள் சென்றன" என்ற மாயத்தை என்னால் அங்கு காணமுடியவில்லை. வந்தியத்தேவன் கம்சனின் வேடத்தில் இருந்தது ஒரு காரணமோ தெரியாது.

குந்தவை அருள்மொழிவர்மருக்கு கொடுத்துவிடும் ஓலையில் செய்தி "பொன்னியின் செல்வ!" என்று துவங்கும். ஆனால் படத்தில் அருள்மொழி என்று தொடங்குவதாக இருக்கும். சற்றே ஏமாற்றமாக இருந்தது. பூங்குழலி பாடும் "அலைகடலும் ஓய்ந்திருக்க அககடலும் பொங்குவதேன்" என்ற பாடலை எப்படி மாற்றப் போகிறார்கள் என்று பார்த்திருந்தேன். அழகான இன்னொரு பாட்டாக மாற்றியிருந்தார்கள். ஆனால் அது படத்தில் முழுதாக வராததும் ஏமாற்றமே. ஆனால் தேவராளனின் பாடலும் ஆடலும் என் கற்பனைக்கு மேலாகவே இருந்தது.

ஆனால் பெரிய குறை, ஆழ்வார்க்கடியானை பாவித்த விதம். ஆழ்வார்க்கடியான், முதன் மந்திரி அநிருத்தபிரமராயரின் சீடனும் ஒற்றனும் ஆவார். ஊர் ஊராகச் சென்று ஒற்று அறிந்து முதன் மந்திரிக்கு மட்டுமல்ல, பெரிய பிராட்டி செம்பியன் மகாதேவிக்கும், இளைய பிராட்டி குந்தவைக்கும் நாட்டு நடப்புகளைச் சொல்பவர். குந்தவை "நாட்டில் மக்கள் என்ன பேசுகிறார்கள்" என்று கேட்பதும், அதற்கு "தங்களின் திருமணத்தைப் பற்றி பேசுகிறார்கள்" என்று படத்தில் முதன் மந்திரி பேசுவதாக அமைந்த உரையாடல் குந்தவைக்கும் ஆழ்வார்கடியானுக்கும் இடையில் நடந்த உரையாடல். அத்துடன் ஆழ்வார் பாசுரங்களை கற்பதும், பரப்புவதும்கூட அவரின் செயலாக இருந்தது. அந்தப் பாத்திரத்தை இன்னும் கொஞ்சம் காத்திரமாக PS 1ல்காட்டியிருக்கலாமோ என்று எனக்குத் தோன்றியது. முற்று முழுதாகப் புத்தகத்தை படத்துடன் ஒப்பிடுவது எனது நோக்கமல்ல.

ஆனால் படம் ஒரு பிரமாண்டமான ஒரு படைப்பு, பல கலைஞர்களின் திறமைகளின் வெளிப்பாடு என்பதில் சற்றும் ஐயமில்லை. இரண்டாம் பாகத்துக்காக காத்திருக்கிறேன்.